# ஞான தீபம்





புதுச்சேரி ஞானாசிரியர் திரு. பா. கமலக்கண்ணன்

# ஞான தீபம்.

**காப்பு**

உன்னரும் ஆறு முகக்குரு ஒண்பதம்,
முன்னவர் முத்தால் ராவுத் தர்பதம்,
பொன்பனைக் கோட்டை முனிவர் பொற்பதம்,
மன்னிய ஞானியர் மலர்ப்பதம் காப்பே.


எழுதியவர்

**பா. கமலக்கண்ணன்**



**வெளியிடுவோர் :-**
முதியோர் சரணாலயம்
3/140, மைக்ரோ டவர் சாலை,
அகத்தியர் நகர் (முரட்டாண்டி)
ஆரோவில் அஞ்சல், பாண்டிச்சேரி - 605 101.

# முன்னுரை

இறைவனின் தூதராய் வந்த
        இராம லிங்கரின் அருட்பா
மறைநூல் ஞான விளக்கம்
        மக்கள் அறிந்து பயன்பெற
முறையொடு மொழிந்தனன் காணீர்
        முத்தி மார்க்கம் அடைந்திட
நிறைமொழி ஞான தீபம்
        நிலைத்திட ஏற்றினன் காணீர்.

- பத்தியொடு குருவடி பணியும்

**பா.கமலக்கண்ணன்.**


16, கிழக்குத் தெரு,
பழைய சாரம்,
பாண்டிச்சேரி - 605 013.
தொலைபேசி: 91-413-2248046.
மின்னஞ்சல் முகவரி: kamalakkannan1932@gmail.com

## 1. தோரணவாயில்

சோதி ஆறு முகக்குரு துணையொடு,
ஆதி நூல்கள் ஆய்ந்து தெளிந்து,
நீதி நிலைத்திட ஞான தீபம்
ஓதி உணர்த்தினேன் கமலக் கண்ணன். - 1 -

## 2. உலகுக்கெல்லாம் ஒருவனே இறைவன்

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே
திருமந் திரநூல் தெளிவுரை இதாமே;
ஒருவனே இறைவன்; உண்மை உணர்வாம். - 2 -

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்
என்றே இயம்பும் திருமந் திரநூல்;
ஒன்றே பிதாவென உரைக்கும் பைபிள்;
ஒன்றே அல்லாஹ் ஒலிப்பது குர்ஆன். - 3 -

ஒருவனே பரமாத் மாவென உணர்வீர்;
கருவாம் முத்தி கண்டிட வேண்டின்
இருவகைக் கருத்துக் கிடமிலை என்றே
அருள்வது முண்டக உபநிஷத் தாகும். - 4 -

உருவிலன் ஓதி உணர்தற்கு அரியவன்
இருளிலன் பிறப்பிலன் இறப்பிலன் நித்தியன்
ஒருவனாய் உலகைப் படைத்தவன் அவனென
அருள்மிகு ஆதி சங்கரர் அறைந்தனர். - 5 -

அறவாழி அந்தணன் எண்குணன் இறைவன்,
பிறங்கிடதனக் குவமை இல்லாப் பெற்றியன்,
உறவும்பகை மையும் உட்படான் என்றே
அறத்துப்பால் குறிப்பது அரூப பிரம்மமே. - 6 -

நீதியை நிறைவை மறைகள் நான்கும்
ஓதியை ஒருவரும் அறிய வொண்ணா
சோதியை சுடர்செம் பொன்போன் றானை
ஆதியை மறவேன் என்பர் அப்பர். - 7 -

மூவரும் முப்பத்து மூவரும் மற்ற
தேவரும் காணாச் சிவபிரான் என்று
ஆவணம் அளித்துளார் மணிவா சகனார்;
ஆவதும் அழிப்பதும் அரூப பிரம்மமே. - 8 -

சிவன்அரு உருவம் சித்அசித் அல்லன்;
பவம்முதல் தொழில்கள் பண்ணுவன் அல்லன்;
தவம்முதல் தரிப்பவன் அல்லன் என்று
சிவஞா னசித்தியார் தெளிவாய்க் கூறும். - 9 -

உலகுள சமயங் கட்கெலாம் ஒருவனாய்,
புலனைந் துக்கும் புலப்படாப் பெற்றியன்,
அலகில் ஆதியாய்ச் சோதியாய் உயிராய்
இலங்குவன் என்பர் நம்மாழ் வாரே. - 10 -

ஆதி நடஞ்செய்தான் என்பர் ஆதர்கள்;
ஆதி நடஞ்செய்கை ஆரும் அறிகிலார்;
ஆதி அரனல்லன்; பரனாம் உயிரென
ஓதினர் திருமூலர் உலகோர் உணரவே. - 11 -

சிவன்எனும் சீர்சொல் அரனையும் அரூபனாய
பவமிலாப் பரமனாம் சோதிச்சுடர் சொரூபனையும்
கவர்தல் தமிழ்ப்பாக் களின்வழக்காய் அமைந்துளதால்
அவரவர் அரனே எனக்கருதல் இயல்பானதே. - 12 -

## 3. இறைவனும் தெய்வமும்

இறைவன் தெய்வம் இரண்டும் ஒன்றல;
இறைவன் அரூபன்; தெய்வம் இன்னுரு;
அறைந்திட அரனே கப்ரியேல்; ஜிப்ரயீல்;
துறையறி தூயோர் விளக்கம் இதாமே. - 13 -

உடுக்கள் ஒளிரும் வானம் ஒன்றல
அடுக்காய் எழுவகை வானம் அமைந்துள;
ஒடுக்கமாய் ஏழில் தெய்வம் உறைவர்;
வடுவிலா வல்லான் எண்குணன் என்பர். - 14 -

வானவர் அனைவரும் வல்லான் படைப்பே;
வானவர் தொழில்கள் வல்லான் வகுத்ததே;
வானவர் வணங்குவர் வல்லான் திருவடி;
வானவர் வடிவம் காண்பர் ஞானியர். - 15 -

## 4. தெய்வங்களைக் காணலாம்.

தேவரும் மூவரும் இருப்பது உண்மை;
ஆவலாய் அடங்கி தவத்தில் அமர்ந்திட
தேவர் ஞானியர் தெளிவாய்த் தெரிவர்;
பாவகம் பயின்றிடப் பெருந்துணை யாவரே. - 16 -

## 5. மனிதப் பிறவியின் கடன்

எல்லா உயிர்களுள் ஏற்றமாய் மனிதனை
வல்லான் வடித்தான்; சீவனாய் அமர்ந்தான்;
சொல்லற சுடரடி சேர்தற் கென்றே
கல்வியும் ஞானமும் கற்றிடச் செய்தான். - 17 -

பிறவிப் பெருங்கடன் ஞானத் தவம்செயல்;
அறம்பிறழ் ஆவலால் அலையும் மாந்தர்
சிறப்பிலா அவம்செய் சிறியோ ரென்றே
திறமாய்ச் செப்பினார் திருவள் ளுவரே. - 18 -

மனிதப் பிறவியின் மாண்பு யாதெனின்,
இனியும் பிறவா திருப்பதே யாகும்;
தனித்து விழித்து பசித்து தவம்செய
இனித்த சொர்க்கம் எய்த லாகுமே. - 19 -

## 6. மனிதனும் பஞ்சாட்சரமும்

நகார மண்ணே நம்முடை பருவுடல்;
மகார நீரே மன்னிய இரத்தம்;
சிகாரத் தீயே உடலின் சூடாம்;
வகாரம் சுவாசம்; யகாரம் மனமாம். - 20 -

நகாரம் பிரமன்; மகாரம் திருமால்;
சிகாரம் ஈசன்; வகாரம் மகேஸ்வரன்;
யகாரம் சதாசிவம்; ஐந்தெழுத்து ஆமிவை;
மகாதவ ஞானியர் மறைமொழி இதாமே. - 21 -

## 7. தச வாயுக்கள்

மண்ணின் அம்சமாம் மனித உடலைப்
பண்ணவன், இயக்குவன் பத்து காற்றால்;
எண்ணிட முதலாய் இருப்பது பிராணன்;
மண்ணில் இறுதியாய் மாய்ப்பது தனஞ்செயன். - 22 -

அடல்மிகு அபானன் வியானன் உதானன்
நடக்கும் சமானன் நாகன் கிருகரன்
திடமுடைக் கூர்மன் தேவ தத்தன்
உடலில் இருந்து உறுதொழில் செய்வன. - 23 -

## 8. சுவாசம்

காற்று காண இயலா தாயினும்
ஆற்றும் செயலோ அரிதினும் அரிதாம்;
காற்றே பிறப்பு; காற்றே இறப்பு;
காற்றே உயிர்; காற்றே முத்தி. - 24 -

ஒருநிமி டத்தில் உறுபதி னைந்தென
ஒருநாள் உள்ளும் புறமும் சுவாசம்
இருபத் தோரா யிரத்தறு நூறு
பருஉடல் இயங்கிடப் பாங்காய் வரும்போம். - 25 -

வலது சூரியன் வக்கிர சுவாசம்;
உலவும் இடகலை உன்னத சந்திரன்;
மலமறு மறைமொழி வாம தேவன்;
கலசம் நுழையும் காற்று சுழுமுனை. - 26 -

கற்றவர் அறிவர் கலைகள் விளக்கம்;
மற்றவர் மயங்குவர் மாய வலையில்;
நற்றவக் கலையை நண்ணி நடந்தோர்
பொற்படி பொருந்துவர்; பிறப்பை அறுப்பரே. - 27 -

## 9. வேதம் - வேதாந்தம்

வடமொழி வழங்கும் வேதம் நான்கும்
அடங்கலர் ஆரியர் உடைமை யன்று;
கடனென சத்ரியர் கற்றுக் காத்தவை;
திடமாய்ச் செப்பும் சாந்தோக் உபநிஷத். - 28 -

இறைவன் வாக்காய் எழுந்த வேதம்
குறையுடைக் கொடியோர் அறியா திருக்க
மறைவாய் வடமொழிச் செய்யுளில் மலர்ந்தது;
மறவர் மாண்பொருள் பிராமணர் கவர்ந்தனர். - 29 -

ஆதியோன் அரனுக் கருளிய வேதம்
நீதியாய் நிலைத்திட அகத்தியர் என்னும்
ஆதி தட்சிணா மூர்த்திக் களித்தனன்;
ஓதினார் உயர்முனி சனகா தியர்க்கே. - 30 -

ஆதவன் முதலாய் ஆன்மா ஈறாய்
மாதவன் மொழிந்த மந்தணம் உபநிஷத்;
நாதனை நண்ணிடும் ஞான காண்டமாம்
வேதப் பொழிப்புரை வேதாந் தமாமே. - 31 -

அருந்திறல் ஆதி சங்கரர் முயன்று,
அருமறை வாய்மொழி ஆகமம் திரட்டி,
உருவுடை ஏட்டில் உசிதமாய்ப் பதித்து
பொருளுரை பாஷ்யம் புரிய எழுதினர். - 32 -

## 10. வேதாந்தமும் சித்தாந்தமும்

அத்தனை அடைந்திட சொல்முறை விளக்கம்
வித்தக விளைமுதல் வேதாந் தமாகும்;
சித்தர் அநுபவ செயல்முறை விளக்கம்
சித்தாந் தமாகும்; செவ்வை மொழியிதே. - 33 -

## 11. சித்தர்கள்

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்தமுடிவும் தம்முள் கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் என்று
தத்துவ விளக்கம் தந்துளார் மூலர். - 34 -

சித்தர் பதினெண் பேரென செப்புவர்;
உத்தமர் அகத்தியர் ஒட்டிட வள்ளலார்
இத்தரை இலங்கும் எண்ணிலா சித்தரே;
முத்தி நெறியே சித்தர் நெறியாம். - 35 -

## 12. சரியை, கிரியை யோகம், ஞானம்.

ஆலயம் தொழுதல் சரியை ஆகும்;
சீலமாய் சக்கரம் செபித்தல் கிரியை;
கீலக யோகம் கேடாம் மரணம்;
தூலம் முத்தி துய்த்தலே ஞானமாம். - 36 -

## 13. ஆலயம் தொழுதல்

ஆலயம் தொழுதல் அருநீர் மூழ்குதல்
காலக் கடைவரை செய்யினும் பயன்என்?
காலன் கணக்கில் கர்மம் நிற்குமே,
சீலமாம் ஞானமே சிதைத்திடும் செய்வினை. - 37 -

சிலையை வணங்குதல் சிறுநிலை யாகும்;
அலைமனம் அடங்கிட ஞானம் தேவை;
தலைவனை அடைந்திட தவநெறி தேவை;
நிலையாய் நின்றிட குருதுணை தேவை. - 38 -

நித்திய ஞான நெறியை அறியார்
முத்தி என்பது முடியா தென்றும்
பத்தி பஜனை போது மென்றும்
சத்தியம் செய்வர்; எத்தர் களாமே. - 39 -

காடு புக்கு காவி யுடுத்தி
நாடு முழுதும் நடக்க வேண்டா
வீடு பேறடை தீப விளக்கம்
தேடு என்பது திருப்புகழ் அறிவுரை. - 40 -

## 14. சைவ சித்தாந்தம்

உருவுடை அரனே உலகைப் படைத்தான்
இருக்கும் உயிர்கள் இறைவன் படைப்பல
மருவுடை மலங்கள் அரன்போல் அநாதி
தருக்கநூல் தத்துவம் இவையெனக் கூறுவர். - 41 -

தருக்க சங்கிரகம் தருக்க பரிபாஷை
இருக்கும் இவ்விரண்டு நூலிலும் இவர்களுடை
கருத்துக் காதாரம் கடுகள வுமில்லை;
பொருந்தாப் பொய்யுரைத்தல் கொடிய பாவமாமே. - 42 -

மன்னிய அரனும் மலமும் அநாதியாய்
ஒன்றென் றுரைப்பது சைவசித் தாந்தமோ?
முன்னம் நால்வர் மொழிந்தது பிழையோ?
அன்னோ உண்மை அறியார் கூற்றிதாம்! - 43 -

இருக்கின்ற உயிரினங்கள் அனைத்தையும் இறைவனே
உருவாக்கி உயிர்க்குயிராய் உறைகின்றான் என்றே
திருமூலர் திருஞான சம்பந்தர் அப்பர்
அருள்மாணிக் கவாசகனார் உமாபதிசிவம் அறைந்துளர். - 44 -

பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திரம்
இன்னணம் இயம்பிட, உண்மைக்கு மாறாய்
பன்னூ றாண்டாய் பழுதுபடக் கூறி
அன்னோ ஆரிருள் ஆழ்த்துவது பாவமாம். - 45 -

## 15. யோகமும் ஞானமும்

உலகில் யோகம் உரைப்போர் பலருளர்;
பலனிலா மார்க்கம் பரகதி அடையார்;
பலகால் பாங்குடன் வாழ்ந்து மடிந்து
உலகில் மீண்டும் பிறந்து உழல்வரே. - 46 -

குண்டலி யோகம் கூர்ந்திட இன்பம்
கொண்டிட லாமெனக் கூறுவர் யோகிகள்;
கண்ணும் கபாலமும் நொந்தனர் பலரே;
நண்ணுதல் நன்றல என்றனர் சித்தர். - 47 -

எத்தனைக் காலம் யோகம் இருப்பினும்;
முத்தி அடைய முடியா தென்றே
சித்தர் பலரும் உறுதியாய்ச் செப்பினர்;
முத்தி வேண்டிடின் முயல்க ஞானமே. - 48 -

எண்ணிய இரண்டின் இலக்கணம் கேட்கின்
உண்டிடக் காமம் உறுவது யோகம்;
உண்டிட வாமம் உறுவது ஞானம்;
நண்ணிட நற்குரு மறைபொருள் நவில்வரே. - 49 -

ஆமப்பா காமப்பால் ஆகா தப்பா;
வாமப்பால் மாங்காய்ப்பால் வழித்துணையாமே;
சோமப்பால் உண்டாரே சொர்க்கம் புகுவார்;
நேமகமாய் நித்தியநிலை எய்திட முயல்வாம். - 50 -

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்பார்
தேங்காய்ப்பால் தேடித் திரிவ தில்லை;
ஆங்காரம் அடங்குமே ஆணவம் அழியுமே
ஓங்கார நாதம் ஒலிப்பது கேட்குமே. - 51 -

மங்காத மாங்காயின் மர்மம் உணர்த்தவே
சங்கரனார் சந்திரனைச் சடையில் அணிந்தார்;
மங்கைஉமை தங்குமிடம் இடப்புறம் காட்டினார்;
எங்குமுள இஸ்லாமும் பிறையைப் போற்றுமே. - 52 -

சோமபானம் ஒன்றே சுழுமுனையின் தாள்திறக்கும்;
சோமபானம் ஒன்றே சுட்டெரிக்கும் கர்மவினை;
சோமபானம் ஒன்றே சொர்க்கநிலை சேர்ப்பிக்கும்;
ஆமப்பா கண்ணன் அர்ச்சுனனுக் குரைத்தகீதை. - 53 -

கற்கக் கற்பவை என்றதன் உட்பொருள்
கற்க ஞானக் கல்வி; கற்றபின்
நிற்க தியான நிலையில் என்பதாம்;
கற்போம் ஞானமே; நிற்போம் தவநிலை. - 54 -

## 16. பரிபாஷை

அரிய ஆன்மிக விளக்கம் எவர்க்கும்
புரியா சொற்களில் புகல்வது ஏனெனில்
உரிய பக்குவம் உடையோர் மட்டுமே
தெரிந்து தியானம் பயின்று உயரவே. - 55 -

முத்தி பெறுநெறி சித்தர் பலரும்
உத்தியாய் ஒளிவாய்ப் பாடி வைத்தனர்;
எத்தர் ஏறு மாறாய் விளக்குவர்;
இத்தரை மாந்தர் எளிதாய் மயங்குவர். - 56 -

எட்டும் இரண்டும் அறியாத என்னை
எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி
எட்டும் இரண்டும் இலிங்கமாமே எனமூலர்
சுட்டுச் சொற்களால் சொல்லியது பரிபாஷை. - 57 -

எட்டிரண்டு அறிவித் தென்னைத் தனியேற்றி
பட்டிமண் டபத்தில் பதித்தமெய்த் தந்தையே;
பட்டமாய் வள்ளலார் பாடிய அநுபவமிதே;
கிட்டிட ஞானம் அறிவோம் எட்டிரண்டும். - 58 -

எண்ணா னாய்எழுத் தானாய் என்று
திண்ணமாய் அப்பர் செப்பினர் மறைபொருள்;
உண்மை யாகவே எழுதா எழுத்து
உண்டென உரைக்கும் திருமந் திரமே. - 59 -

எட்டும் இரண்டும் இலிங்கம் என்று
இட்டமாய் இன்னிசை அருண கிரிக்கு
அட்சர விளக்கம் அருளினன் முருகோன்;
திட்டமாய் திருப்புகழ் கூறும் சான்றிதே. - 60 -

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென
வண்ணமாய் வள்ளுவர் அவ்வை மொழிந்ததும்
திண்ணமாய் சித்தர் கூற்றொடு சேருமே;
உண்மை விளக்கம் உரைப்போர் ஞானியே. - 61 -

சித்தர் தத்துவம், சிவநெறி தத்துவம்
இத்துணை இயல்பாய் பொருத்தி இருப்பதை
உத்தியாய் உணர்தல் அறிவின் கடனே;
தத்துவம் வெவ்வே றாமெனல் தவறாம். - 62 -

## 17. பிறப்பும் இறப்பும்

பிறப்பு என்பது பெரிய புதிராம்;
இறப்பு எளிதில் அறியொணா மந்தணம்;
அறநெறி ஞானியர் உண்மை அறிவர்;
பிறநெறி யாளர் கூற்று பிதற்றலே. - 63 -

இயல்பாய் மரணம் எய்திய பின்னர்
உயர்வாம் புண்ணிய உலகமோ, தாழ்வாம்
துயர உலகமோ துய்த்திட ஏகுவர்;
மயர்வற சித்தர் மணிமொழி இதாமே. - 64 -

மன்னுயிர் தற்கொலை மாபெரும் பாவமாம்;
இன்னுயிர் அலகை இங்கே அலைந்து
உன்னிய நாளில் உயர்வான் சென்று
சின்மை நரகில் திண்ணமாய் உழலுமே. - 65 -

## 18. செத்த பிறகோ சிவலோகம்?

திருமால் திருவடி சிவனின் சேவடி
பொருந்துவோம் என்பார் பொருளை அறியார்;
அருள்நிலை அறியா அந்தகர் அவரே;
குருடும் குருடும் குழிவிழும் கதையே. - 66 -

இறந்தோர் அனைவரும் இறையடி சேர்ந்ததாய்க்
கறங்குதல் முற்றாய்க் கற்பனை யாகும்;
பிறகு சாந்தி பிரார்த்தனை ஏனோ?
இறப்பில் இருவகை இருப்பது உண்மை. - 67 -

செத்த பிறகல சீர்சிவ லோகம்;
முத்தி சித்தி முடிவிலா முழுநிலை
இத்தரை இருக்கும் போதே எய்தலாம்;
சித்தர் பலரும் சத்தியம் செய்தனர். - 68 -

ஈண்டு இடறிலாத் தவம்செய் ஞானியர்
வேண்டிய வேண்டியாங் கெய்துவர் என்பது
மாண்புடை வள்ளுவர் மறைமொழி யாகும்;
தீண்டான் மறலி; தெரியாது எச்சம். - 69 -

## 19. இருவகை மரணம்

இருவகை மரண இயல்பை சித்தர்
ஒருமுக மாக உறுதியாய்க் கூறுவர்;
ஒருவகை மறுபடி உலகில் பிறத்தல்;
பெருநிலை பிறப்பை அறுத்திடும் அடக்கமாம். - 70 -

பருவுடல் பெருத்து விறைத்து நாறுதல்
ஒருவகை ஒவ்வா அசைவ மரணம்;
உருவம் உறக்கம் போல்வது சைவமாம்;
பெருமை பிறங்கும் முத்தி நிலையிதே. - 71 -

இறப்பில் சைவம் இலங்கிட வேண்டி
அறவோர் அருளால் அருங்கலை பயின்று
திறமாய்த் தீவினை அகலச் செய்து
பிறப்பை அறுப்பது பெறற்கரும் பேறாம். - 72 -

தவத்தால், தக்கார் உச்சி திறத்தலால்,
உவந்து சுவாசம் உயரே ஏகிடும்;
அவத்தை இராது; அமுதம் ஊறும்;
அவயவம் அனைத்தும் இயல்பாய் இருக்குமே. - 73 -

இறுதியாய் உள்ளே இழுக்கும் சுவாசம்
உறுதியாய் உயர்த்திட இயலா தார்க்கு,
அறுதியாய் ஒன்பது வாசலும் அதிர்ந்திடும்;
உறுபொருள் வெளியே ஓடிட அசைவமாம். - 74 -

அடக்கம் அமரருள் உய்க்கும் என்றது
கடத்தின் கடைசி காட்சியைக் குறிக்கும்;
சுடர்போல் சூக்கும தேகம் சொலிக்கும்;
இடரிலா சீவனோடு இணைந்து நிற்குமே. - 75 -

தக்கர் தகவிலர் என்பதன் உட்பொருள்
சொக்க நிலைக்குத் தக்கர் தகவிலர்;
எச்சம் என்பது இறுதி சுவாசம்
எச்சமாய்த் தள்ளுதல்; இயல்பாய் இருத்துதல். - 76 -

## 20. பதி பசு பாசம்

குரவர் நால்வர் கூற்றுக் கெதிராய்
அரன்பதி; பசுவே ஆருயிர்; மும்மலம்
கரவாய்க் கட்டுதல் பாசம் என்றே
தரமிலா அறிஞர் தருக்கொடு கூறுவர். - 77 -

அண்டத் துள்ள அரூப இறைவனே
பிண்டத் துள்ளே சீவனாய்ப் பிறங்குவன்;
திண்ணமாய்த் திகழுரு இலிங்கமே பதியாம்;
உண்மை கண்ட சித்தர் உரையிதே. - 78 -

தன்னுரு போலும் தகவுடை ஒளியுரு;
நன்மை தின்மை நரவுடல் செய்வதைத்
தன்மேல் தாங்கி பசுபோல் நிற்கும்
உன்னரும் சூக்கும உடலே பசுவாம். - 79 -

காற்றே பாசமாம்; கயிறு இதன்பொருள்
ஆற்றல் மிக்குடை சீவன் அண்டக்
காற்றைக் கயிறென இழுத்து விடுக்கும்;
காற்றொலி எழுப்பும் காளை நந்தியாம். - 80 -

## 21. சீவனின் உருவே சிவலிங்கம்

உச்ச நிலையில் ஒளிரும் பரம்பொருள்
உச்சி வழியே உள்ளே சென்று
அச்சிற் றம்பலம் அமர்ந்தனன் என்று
நிச்சய நிரூபணம் சாந்தோக் உபநிஷத். - 81 -

ஆதியாய் அரூபமாய் இலங்கும் இறைவனே
சோதியாய்ச் சுடராய் சூழொளி விளக்காய்
ஓதிட உயிராய் உயர்சிவ லிங்கமாய்
நீதியாய் நரஉடல் தாங்கி நின்றனன். - 82 -

மலர்மிசை ஏகினான் மாணடி என்பது
அலகில் சோதியன் ஆதி பகவன்
உலகோர் சிரசில் உயிராய் அமர்ந்து
இலங்கும் இலிங்க சொரூப மேயாம். - 83 -

பிறப்பெனும் பேதைமை நீங்கு தற்கு
சிறப்பெனும் செம்பொருளைக் காணல் வேண்டும்;
திறமாய்த் தெரிந்திடசெம் பொருளது சீவனாம்;
அறவோர் அறிந்துரைத்த விளக்கம் இதாமே. - 84 -

உத்தம உயிரின் உருவமே இலிங்கமாம்;
சித்தர் முத்தர் சீவனைக் கண்டுளர்;
சித்தம் தெளிந்தோர் சீவனைக் காணலாம்;
சத்தியச் சான்றிது; சித்தம் தெளிவோம். - 85 -

சீவனைக் கண்டிட சிரசு பிரிந்திடும்;
தேவரும் மூவரும் தெளிவாய்த் தெரிவர்;
நோவதும் நொந்து சாவதும் விலகிடும்;
ஆவது முத்தி அமர நிலையே. - 86 -

ஏட்டுக் கல்வி இல்லை ஞானம்;
ஆட்டிடும் மெய்ப்பொருள் காரணம் அடங்க
கூட்டிடும் சுழுமுனை குறியாய் ஏறும்;
காட்சியாய் சீவனைக் காண லாமே. - 87 -

உடம்புளே உறுபொருள் கண்டேன் என்று
திடமாய்ச் செப்பினர் மூலரும் அப்பரும்;
கடத்துளே உயிராய் விளங்கும் கடவுளைப்
படம்போல் பார்க்கலாம் என்றுரை கீதை. - 88 -

கடத்துளே உயிராய் அமர்ந்த கடவுளை
திடமுடை தவத்தால் தெரிந்து கொள்ள
தடமும் தயவாய் சித்தர் உரைத்துளர்;
சடமாய்ச் சாதல் சால்புடைச் செயலல. - 89 -

## 22. துவைதம், அத்வைதம்

பரமன் சீவன் இரண்டெனல் துவைதமாகும்;
பரமனே சீவனாய்ப் பகர்தல் அத்வைதம்;
பரமன் அரூபமாய்ப் பார்க்க இயலாதான்;
சிரத்தொளிர் சீவனின் சொரூபமே காணலாகும். - 90 -

## 23. அகம் பிரம்மாஸ்மி

உடலே நானென் றுரைப்பது மடமையாம்;
உடலுள உயிரே நானெனல் அறிவுடைமை;
கடவுளே நானெனக் கழறுவர் சித்தர்கள்;
திடம்பட செப்பினார் ஆதி சங்கரனார். - 91 -

## 24. சூக்கும சரீரம்

அறிவுகள் ஆறுடை மனிதன் என்பர்;
அறிவாம் ஐம்புலன் மட்டுமே அறிவோம்;
அறிவாம் ஐம்புலன் அடக்கி, ஆறாம்
அறிவாய் அறிந்திட சூக்குமம் பகுத்திடும். - 92 -

அற்றம் காக்கும் அறிவு என்பது
நற்றவம் நண்ணியோர் பகுத்துக் கண்டிடும்
குற்றமில் கோலமாய் ஆறாம் அறிவாய்
உற்றது ஒளிநிறை சூக்குமக் கருவியாம். - 93 -

சுடர்மிகு சூக்கும சரீரம் சிரசில்
அடக்கமாய் சீவனின் அடிக்கீழ் நிற்கும்;
அடல்மிகு சுழுமுனை அதிர்ந்து ஏறிட
தடம்உயர் சீவனை தழுவிக் கொள்ளும். - 94 -

அண்ணாமலை என்பது ஆக்ஞா ரந்தரம்;
உண்ணாமுலை என்பது உயர்பொருள் காரணம்;
கண்ணாடி காட்டும் உருவம் போலும்
உண்ணாடி ஒளிரும் சூக்குமத் தோற்றம். - 95 -

தன்னைத் தானறி என்றே சித்தர்
நன்றாய் நயந்தது யாதெனின், தவத்தால்
தன்னுடை சூக்குமம் தன்னுடல் பிரிந்து
தன்முன் தனியே நிற்கக் காண்பதாம். - 96 -

தன்னுடை தவத்தால் சூக்குமம் கண்டிடில்
உன்னரும் உயர்நிலை குருமுதல் ஞானியர்
சின்மய சிற்பர தெய்வங் களுமே
தன்முன் தயவொடு தோன்றி அருள்வரே. - 97 -

தன்செயல் தானே தன்னை அறிதல்;
தன்செயல் தானே தன்னை அழித்தல்;
தன்செயல் தானே சித்தியும் முத்தியும்;
தன்செயல் தானே மறுபிறப் பாகும். - 98 -

## 25. மெய்ப்பொருள்

உடல்பொருள் ஆவி மூன்றென உரைப்பதில்
திடமாய்ப் பொருளது திரவியம் அன்று;
கடமதில் இடம்வலம் காண்பது அப்பொருள்;
மடலது மறைத்திடும் மாண்புடைப் பொருளது. - 99 -

பொருளிலார் உலகிலார் என்பது புதிர்மொழி;
கருப்பொரு ளறியார் கதைத்தல் புனைந்துரை;
பொருளது பொய்ப்பொருள் அல்ல; அரும்பொருள்;
அரும்பொருள் இலையேல் அறிவது ஒன்றுமில். - 100 -

எப்பொருள் எவரெவர் வாயால் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவென
ஒப்பிலா வள்ளுவர் உரைத்தது அரும்பொருள்;
அப்பொருள் யாதென அறிந்தோர் சித்தரே. - 101 -

தெய்வத்தால் ஆகாதது செனனம் அறுத்தல்;
மெய்வருத்தச் செய்தவமே கூலி தரும்;
மெய்யென்பது மெய்ப்பொருளே யன்றி உடலல;
மெய்விளக்கம் இதுவேஎன மெய்யாய் அறிவாம். - 102 -

## 26. மெய்க்குரு

நீதி வழுவா நெறிமுறை யுடைய
மேதினி, மேலுல காம்;அதில் இட்டார்
சாதியில் பெரியோர்; சால்பிலாப் பொய்க்குரு
சாதியில் இழிந்தோர்; சாத்திரக் கூற்றிதே. - 103 -

சித்தர் பாடல் சிந்தை மயக்கும்;
உத்தம உயர்குரு ஒளிவழி காட்டிட
நித்தமும் பயின்றால் நித்தியம் பெறலாம்;
சித்தர் தத்துவம் தெளிந்த நெறியாம். - 104 -

அரிதாம் ஞானம் அடைந்திடத் தேவை
உரிய பக்குவம்; உறுதி உடைமை;
திரியா மனத்தில் திண்ணிய எண்ணம்;
சரிவிலாப் பயிற்சி; சற்குரு துணையே. - 105 -

தன்னை அறிந்த தகவுடைக் குருவை
அன்பொடு சீடன் அண்டி வணங்கின்
தன்புகழ் பேசார்; தட்டிக் கழிப்பார்;
பின்னர் பெரிதும் சோதித் தறிவார். - 106 -

உண்மைக் குருவெனில் ஒடுக்கமாய் இருப்பார்;
உண்மைச் சான்றுகள் உடலில் காணலாம்;
உண்மைச் சீடர்க்கு உய்வழி காட்டுவார்;
கண்ணிமை போலும் சீடரைக் காப்பரே. - 107 -

கணக்காய்க் கலையில் லயித்துள ஞானியர்
உணவிலும் உடையிலும் எளிதாய் இருப்பர்;
பணத்தைப் பறிக்கும் பாதகம் செய்யார்;
குணமெனும் குன்றில் ஏறி நிற்பரே. - 108 -

குருவின் அருளால் காரணம் சூக்குமம்
இருவகை சரீர இருப்பிடம் தெரியும்;
கருவிகள் காற்றால் இயக்கும் சீவனின்
இருப்பிடம் எதுவென அறிய லாமே. - 109 -

அறஞ்செய விரும்பென அவ்வை மொழிந்தது,
அறவோர் தீட்சை அளிக்க வருங்கால்
திறமாய்ச் சீடன் விரும்பி ஏற்றிடின்,
அறநெறி அங்கைக் கனியாம் என்பதே. - 110 -

## 27. பொய்க்குரு

பொய்த்தவ வேடம் புனைந்த தீயோர்
பொய்வழி காட்டிப் பொருளைப் பறிப்பர்;
மெய்நிலை ஞானியே மேல்நிலை ஏற்றுவார்;
மெய்க்குரு பொய்க்குரு ஆய்ந்திடல் கடனே. - 111 -

பாதம் என்பார் பார்பார் என்பார்;
நாதன் என்பார் நானே என்பார்;
சாதனை வேண்டா சந்நிதி என்பார்;
வேதம் கூறா வெற்றுரை இதாமே. - 112 -

மாதரார் இன்றி மகப்பே றுண்டோ?
சாதகம் இலையேல் சால்பு இல்லை;
சாதலை மாற்றுதல் சாதகம் ஒன்றே;
வேதம் கூறும் விளக்கம் இதுவே. - 113 -

அண்டிட முத்தி அளிப்போ மென்பார்;
அண்ணா மலையை அணுகியோரல்லர்;
திண்ணமாய் அவரே திருவடி சேரார்;
நண்ணி நம்பினோர் நாசம் ஆவரே. - 114 -

உடையைக் கொண்டல உயர்ந்தோர் தாழ்ந்தோர்;
சடை முடி காவி சத்தியர் சான்றல;
கடையரும் கவினுறக் காட்சி தருவர்;
நடையைக் கண்டு நண்ணுக நல்லோர். - 115 -

## 28. பாவம் போக்குதல்

முன்வினை பாவம் முழுதாய் விலகிட
தன்னுடை தவமே தகவுடைச் செயலாம்;
சென்னி பிரிந்திட செய்வினை தீய்ந்திடும்;
என்றே சித்தர் தெளிவாய் இயம்பினர். - 116 -

## 29. விதியும் மதியும்

விதியை மதியால் வெல்வது புதிர்மொழி;
மதியால் உச்சியின் மறைப்பைத் திறந்திட
விதிவினைப் பதிவைப் பரஔளி அழித்திடும்;
புதிர்அறி குருவே பொருளை விளக்குவர். - 117 -

## 30. சீடரின் தகுதி

நல்லோர் நடந்திடும் ஞானம் நண்ணிடக்
கல்வியும் வயதும் காரணம் அல்ல;
எல்லா மதத்தவர் இருபால் மக்கள்
நல்ல குருவிடம் நயந்து பயிலலாம். - 118 -

## 31. பஞ்சமா பாதகம்

கள்ளொடு களவும் கொலையும் பிறன்மனை
கொள்ளும் காமம், கூறும் பொய்யுரை
தள்ளுக, தகவிலா பஞ்சமா பாதகம்;
மெள்ள மேலாம் தவநிலை கிட்டுமே. - 119 -

**32. மழித்தலும் நீட்டலும்**

உலகம் பழித்தது ஒழித்திடின் இல்லறத்தார்
மலமறு தவமுடை மாதவர் தோற்றம்போல்
துலங்கும் நீள்முடி தூக்கிக் கட்டுதலோ
இலகுவாய் இலங்கிட மழித்தலோ வேண்டாவாம். - 120 -

**33. இல்லறம்**

இல்லறம் இருந்தே ஞானம் அடையலாம்;
இல்லற ஞானியே ஈடில் அகத்தியர்;
இல்லக் கடமை குறைவற இயற்றிய
நல்லற மனைவியும் நற்கதி அடைவளாம். - 121 -

**34. உண்டி சுருங்குதல்**

உண்டியைச் சுருக்குதல் உத்தமம் ஆகும்;
அண்டம் சுருக்குதல் அவசிய மாகும்;
எண்ணம் இலக்கில் இடையறா திருத்திட
நண்ணுவர் திண்ணமாய் நாதன் நற்றாள். - 122 -

**35. கொன்று தின்னுதல்**

கொன்று தின்னுதல் கூடா நெறியாம்;
அன்பு பெருகிட அசைவம் நீக்குக;
நன்றாம் சைவம் நலம்பல உண்டாம்;
இன்ப வாழ்விற் கெளிய உணவே. - 123 -

**36. ஆனமுதல்**

ஆன முதலில் அதிகம் செலவிடில்
போன திசையெலாம் பொல்லாக் கள்ளனாய்
மானம் அழிவதன் மறைபொருள், இவ்வுடல்,
ஆன முதலே என்பதை அறிவோம். - 124 -

## 37. பெய்யெனப் பெய்யும் மழை

தெய்வம் தொழாது தெளிந்த ஞானியாம்
மெய்த்தவக் கணவனை மேவி என்றும்
தெய்வமாய்த் தேர்ந்து வணங்கும் மாதரார்
பெய்யெனப் பாரினில் பெய்யும் மழையே. - 125 -

## 38. அகத்தியர் தட்சிணாமூர்த்தி

இகபர இருமை நிலைக்கும் உரித்தாய்
அகத்துள ஈசனை அழல்சிவ லிங்கமாய்
முகத்தின் முன்னால் ஆதியில் கண்டவர்
அகத்தியர் என்னும் அருட்பெயர் பெற்றார். - 126 -

**தட்சிணா மூர்த்தி** தமக்குள பெயரென
திட்டமாய் **அகத்தியர்** தெரிவித் துள்ளார்;
குட்டை உருவொடு கும்பம் பாய்ந்ததால்
இட்டமாய்க் **குறுமுனி** என்றார் வசிட்டர். - 127 -

## 39. வடலூர் வள்ளலார்

வடலூர் வள்ளலார் சைவ சமய
மடத்தில் வாய்மொழி மந்திரம் ஓதியே
கடந்தது பயனொன் றில்லாக் காலம்;
நடந்தனர் வெளியே; நண்ணினர் ஞானம். - 128 -

தன்னை அறியும் தவத்தில் நிலைத்து
தன்னைக் கண்டனர்; தலைவனைக் கண்டனர்;
மன்னிய மலர்மிசை ஏகினான் மாணடி
தன்னொடு இணைத்து தன்பிறப் பறுத்தனர். - 129 -

அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை,
மருளது நீக்கி மன்னுயிர் வாழ்ந்திட
பொருள்மிகப் பொதிந்த மந்திரம் இதுவென
அருள்மிகு வள்ளலார் அன்பொடு மொழிந்தனர். - 130 -

சுத்தசன் மார்க்கம், சோதி வணக்கம்,
சத்திய ஞான சபையும் நிறுவினார்;
முத்தி முதிர்ந்திட வருகென அழைத்தார்;
நத்தினா ரில்லை நம்மவர் தானே. - 131 -

இருள்நிலை மாந்தரை எண்ணி வருந்தினர்;
இருப்பதில் பயனிலை என்று நினைத்தனர்;
பருவுடல் பாங்காய் மறைத்துப் போந்தனர்;
குருவருள் இழந்தோர் குருட ராமே. - 132 -

## 40. திருமூலர் சாபம்

பத்தினிப் பெண்டிர், பக்குவ ஞானியர்,
சித்தம் நோகச் செய்தல் பாவமாம்;
அத்தகை அரக்கர் அடுத்த பிறப்பில்
சத்தியம் சத்தியம் நாயாய்ச் சனிப்பரே. - 133 -

**அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி**

************